# விஸ்வஜோதி

தை 1988



## இலங்கை விஸ்வகர்ம சங்க வெளியீடு

தனிப்பட்ட விநியோகத்துக்கு மட்டும்

**VISVAJOTHY — Published by the CEYLON VISVAKARMA SANGAM**

**- For Private Circulation Only -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விஸ்வகர்ம சங்கம்

## நிர்வாக சபை அங்கத்தவர்கள்

## 1987/1988 / ~~1989~~

| | | |
|---|---|---|
| போஷகர் | — | V. சண்முகராஜா |
| தலைவர் | — | S. தியாகராஜா |
| உபதலைவர் | — | S. சிவானந்தன் |
| செயலாளர் | — | S. செல்வரட்னம் |
| உபசெயலாளர் | — | T. பாலசுப்ரமணியம் |
| பொருளாளர் | — | N. விவேகானந்தன் |
| உபபொருளாளர் | — | S. விஸ்வநாதன் |
| கட்டிட நிர்வாகஸ்தர் | — | S. தங்கம் ஆச்சாரி |
| வாசிகசாலை அதிபர் | — | N. சாந்திகுமார் |
| பத்திரிகை ஆசிரியை | — | திருமதி M. தியாகராஜா |
| செயற்குழு அங்கத்தவர் | — | T. கிருஷ்ணநாதன் |
| | — | M. பாக்கியநாதன் |
| | — | S. சிவானந்தன் |
| | — | S. சங்கர் |
| | — | A. கணபதி ஆச்சாரி |
| | — | S. சுப்பையா |
| சமூக தொடர்பு அதிகாரிகள் | — | T. நமசிவாயம் |
| | — | S. கதிர்வேல் ஆச்சாரி |
| கணக்காளர் | — | M. சுப்பையா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் விராட் விஸ்வபிரமனே நம

# விஸ்வஜோதி

தீபம் 2 சுடர் 3

## விஸ்வகர்மாவின் மகிமை

எழுதியவர்: சிவஞானவாரிதி

சைவசித்தாந்த காவலர், குமார குருசுவாமி.

விஸ்வகர்மா உலகம் முழுவதையும் நினைத்த மாத்திரமே நினைத்த விதமாக அமைக்கும் ஆற்றல் உடையவர். இவர் ஐந்து முகங்களை உடையவர். இவருடைய ஐந்து முகங்களிலிருந்தும் பஞ்சகம்மாளர் தோன்றினர். கந்தபுராணத்திலே விஸ்வகர்மாவைப்பற்றிக் குறிப்பிடும்போது ''கடவுட் கம்மியன்'', ''வித்தகக் கம்மியர்'', ''விண்ணவர் புனைவன்'' ''அமரர்க்கம்மியன்'' என்றெல்லாம் கச்சியப்ப சிவாச்சாரியாரினாலே புகழப்பட்ட சிறப்பினை நினைவுகூறுதல் பொறுத்தமுடையது.

''வல்லைவேதன் வகுப்பது மற்றுளக்
கில்லை நேரென்றினது புகழ்ந்திட
வல்லநீரம ரர்க்கிறை காண்குறீ இப்
புல்லினனப் புனைவனை யென்பவே''

—கந்தப்புராணத்தின் விண் குடியேற்றுப்படலம்—32

என்று கூறி இந்திரன் விஸ்வகர்மாவை அன்புமிகுதியினால் ஆரத்தழுவிக்கொண்டான் என்பதிலிருந்து பிரமதேவனை விட விஸ்வகர்மா மேலானவராகவே கருதப்படுவதைக் கந்தப்புராணத்தில் நன்கு அவதானிக்கலாம். இதன் உண்மை நிலையை ஆராயும் போது, படைப்பின் இரகசியமே புலனாகிறது. உயிரினம் உலகில் பிறவி எடுக்கும்போது, அவரவர் செய்துகொண்ட பிராரப்தகர்ம வினையின் பலாபலனுக்கேற்ற விதமாகவே உடலமைப்பு, வடிவமைப்பு, நிறம், உயரம், பருமன் ஆகிய ஐந்து தன்மைகளும், பெற்றோர், வாழிடம், அனுபவிக்கும் சுகம், துக்கம் ஆகிய ஐந்தும் தீர்மானிக்கப்படுகின்றன, உலகத்தில் பிறவி எடுத்த அத்தனை மனித வர்க்கத்தினரையும் காணும்போது இருவர் ஒரே தோற்றப்பாடுடன் காணமுடியாததை யாவரும் நன்கு அறிவர். சோடிக் குழந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாயிருந்தாலும், அவர்களுக்குள்ளேயும் மாறுபாடான தோற்றப் பாட்டினை அவதானிக்கலாம். எனவே, படைப்பிலே பிரமனுக்குப் பல கட்டுப்பாடுகள் உண்டு என்பதை நன்கு அவதானிக்கலாம்.

விஸ்வகர்மா எப்படி உலகத்தை அமைத்து பலவிதமான தோற்றப்பாடுகளை ஆங்காங்கு ஏற்படுத்துகிறார் என்பதை நாம் கந்தபுராணத்தை ஆதாரமாகக் கொண்டு நன்கு அறியலாம்.

சூராதி அவுணர்களினாலே தொல்லையற்ற விஷ்ணு, பிரமா, இந்திரன் முதலான தேவர்கள் தமது துயர் பொறுக்கமாட்டாதவர்களாகி, உலக முதல்வராய சிவ பெருமான் திருமுன்பதாகச் சென்று தமது குறையிரந்து நின்று பிரார்த்தனை செய்து, "தேவரீரே குழந்தையாக வந்து சூரனுக்குத் தாங்கள் அளித்த வரத்தின் இயல்புகளை மாற்றி எம்மைக் காத்தருள வேண்டும்" என்று தொழுதனர்.

சிவபெருமானே தமது நெற்றிக்கண்களிலிருந்தும் ஆறு தீப்பொறிகளைத் தோன்று மாறு செய்தருளி அத்தீப்பொறிகளே ஆறுதிருவதனங்களும், பன்னிரு திருப்புஜங்களும் கொண்டு விளங்கும் ஷண்முகப் பெருமானாகத் திருவவதாரஞ் செய்தருளினார்.

தேவர்களுக்குத் திருவருள் பாலிப்பதுவே நோக்கமாகத் தேவகிரி என்னும் மலை யில் எழுந்தருளிய முருகப் பெருமான் விஸ்வகர்மாவைப் பார்த்தருளிக் கட்டளை இடுவா ராயினார்.

"ஒண்ணில வுமிழும் வேலோ னொலிகழற் றானையோடுங்
கண்ணனை முதலாவுள்ள கடவுளர் குழுவினோடும்
பண்ணவர் கிரிமேற்சென்று பாங்கரிற் றொழுது போந்த
விண்ணவர் புனைவன்றன்னை விளித்திவை புகலலுற்றான்"

—கந்தபுராணம் — தேவகிரிப்படலம் பாடல் 11

ஒளி வீசுகின்ற வேலாயுதத்தையுடைய முருகப் பெருமான் சத்தமிடுகின்ற வீரக் கழல் புனைந்த பூதகண நாதவீரர்களுடனும் கண்ணன் என்று சிறப்பாக அழைக்கப்படும் மகாவிஷ்ணு மூர்த்தி முதலாகவுள்ள ஏனைய தேவர்களுடனும் தேவகிரி என்று அழைக் கப்படுகின்ற மலையை வந்து சம்பித்தருளியதும், சிவசுப்பிரமணியப் பெருமானது பக்கலிலே தொழுதுகொண்டு சென்றவராகிய விஸ்வகர்மாவைப் பார்த்து பின்வருமாறு கூறுவராயினார்.

"புகழுறுஞ் சூழ்ச்சி மிக்கோய் புங்கவ ராயஞோருந்
தொகலுறு கணர்கள் யாருந் துணைவரும் யாமுமேவ
வகலுறு மினைய வெற்பி னருள்கடி நகரமொன்றை
விகலமின் றியின்னே விதித்தியால விரைவினென்றான்"

—கந்தபுராணம் தேவகிரிப்படலம் — பாடல் 12

வார்த்தைகளால் எவ்வளவு புகழ்ந்தாலும், அப்புகழ்ச்சிக்கு ஏற்புடைய பொருத் தமான கற்பனை வளம் நிறைந்து மிகுந்து காணப்படுகின்ற விஸ்வகர்மாவே! தேவர்களும், பெரிய எண்ணிக்கையையுடைய பூதகணங்களும், வீரவாகு தேவர் முதலாய துணைவர் களும், நானும் இங்கே தங்குவதற்குப் பொறுத்தமாக, அகன்ற இடப்பரப்பினை உடைய இந்தத் தேவகிரி என்னும் மலையிலே அருமைவாய்ந்த காவல் பொருந்திய நகரம் ஒன்றினைக் காலதாமதமின்றி இப்போழுதே விரைவாக உண்டாகும்படி செய்வாயாக" என்று முருகப் பெருமான் விஸ்வகர்மாவுக்குக் கட்டளையிட்டருளுவாராயினார். தேவர்கள் யாவரினும் பெருமை மிக்கவரும், கற்பனைசக்தி மிக்கவரும், ஆற்றல் மிகுந்தவரும், முருகப்பெருமானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளையை உடன் நிறைவேற்றும் வல்லமை பொருந்தியவருமாகவே விஸ்வகர்மா கந்த புராணத்திலே காட்டப்படுகின்றார். முருகப்பெருமானது கட்டளையை நிறைவேற்றிய பெருமை விஸ்வகர்மாவினுடையது. முருகன் திருப்பரங்குன்று சேர்ந்ததாகிய சமயத்திலே, கடவுட் கம்மியனாகிய விஸ்வகர்மா என்பவர் அவரவர் தகுதிக்கேற்ப கணங்கள், கணநாதர், துணைவர், முருகப்பெருமான் ஆகியோருக்குத் தனித்தனி இருப்பிடம் வகுத்துக்கொடுத்தான் என்ற பாடல் கருத்துக்கினியதா யமைந்துள்ளது.

''காலையங்கதுதனின் கடவுட் கம்மியன்
மாலுறு கிரிதனிலே வரம்பில் வீதியுங்
கோலநற் றெய்வதக் குலமும் கோயிலுஞ்
சோலையும் வாவியுந் துவன்ற நல்கினான்''

—கந்தப்புராணம் — திருப்பரங்குன்றுசேர் படலம் - பாடல் 27

விஸ்வகர்மா வீதிகள், மாடங்கள், கூடங்கள், காப்பரண்கள், கோபுரங்கள், மகரதோரண வாயில்கள், எழுத்தகங்கள், துவானிப்புகள், சிங்காதனங்கள் முதலானவற்றை அமைப்பதற்குப் பஞ்சகம்மாள நுண்வினை வேலைப்பாடுகள் நிறைந்த நகரத்தை அமைத்தமையால், கட்டு வேலை, சிற்பவேலை, சித்திரவேலை, அழகுவேலை, தச்சுவேலை முதலான பலதரப்பட்ட தொழினுட்ப வேலைகளையும் ஒருவரே செய்து முடித்ததுடன் மட்டுமின்றி முருகப்பெருமானுடைய பாராட்டினையும் திருவருட் பேற்றினையும் தனதாக்கிக்கொண்ட விஸ்வகர்மாவினுடைய பெருமையை இவ்வளவு என்று வார்த்தைகளால் வருணித்துக்கூற முடியுமா?

''அத்துணை யெம்பிரா னமரர்க் கம்மியன்
கைத்தொழி னோக்கியே கருணைசெய்து போய்ச்
சித்திர மறுகிடைச் சேனை வீரரை
வைத்தனன் மந்திர வரைப்பை யெய்தினான்''

—கந்தபுராணம் திருப்பரங்குன்றுசேர் படலம் பாடல் 28

விஸ்வகர்மாவினது கைவண்ணத்தைக் கிருபானோக்கம் செய்தருளிய முருகப்பெருமான் விஸ்வகர்மாவுக்கு நல்லருள் பாலித்தருளி, அவரவர்க்கமைத்த மந்திரங்களில் துணைவர், சேனாவிரர், பூதகணங்கள் யாவரையும் இருக்குமாறு பணித்து, தானும் தனக்கென நிர்மாணிக்கப்பெற்ற மாளிகையிற் சென்றமர்ந்தருளினான் என்று குறிப்பிடுவதனால், விஸ்வகர்மாவினது சிறப்பு உய்த்துணர வைக்கப்பட்டது. தேவலோகத்துக் கடவுட்கம்மியனான விஸ்வகர்மாவினுடைய திறமைகள் அனைத்தும் பூவுலகத்திலும் பரவவேண்டும் என்பதற்காக, பஞ்சமுகங்களுடனும் கூடிய விஸ்வகர்மாவினுடைய முகங்கள் ஐந்திலிருந்தும் பஞ்ச கம்மாளர் உதித்தனர்.

| | | |
|---|---|---|
| சத்யோஜாதம் | — | பொன்வினைக்கம்மியர் |
| வாமதேவம் | — | மரக்கம்மியர் |
| அகோரம் | — | கரும் பொன் கம்மியர் |
| தற்புருஷம் | — | கற்கம்மியர் |
| ஈசானம் | — | செம்புக்கம்மியர் |

என்று கூறப்படும் ஐந்துவகையான நுண்வினைக்கம்மியர் விஸ்வகர்மாவிடமிருந்தே உதித்தவர்கள் ஆதலினாலே விஸ்வகுலத்திலிருந்து தோன்றிய பெருமை உடையவர்கள்.

பவுண் நகைகள், ஆபரணங்கள் செய்து கொடுப்பவர்கள் - பொன்வினைக் கம்மியராக மனிதர்களது பொன் ஆபரணங்களை அவர்கள் விரும்பியவாறு புன்னகையுடன் அணிவதற்கு எந்த வடிவமைப்பில் கட்டினை இருந்தாலும் அதேவிதமாக எத்தனை நகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமோ அத்தனை நகைகளையும் கண்கவர் ரூபலாவண்யத்துடன் அமைத்துக் கொடுக்கும் ஆற்றல் வாய்ந்தவர்களாக இன்றும் திகழ்வது பாராட்டுக்குரியதொன்றல்லவா?

அதேவிதமாகவே கற்கம்மியர் கருங்கல்லிலே சிற்பங்களை வடிவமைத்து ஆலயங்களை உருவாக்குவதற்கு உதவுகின்றனர்.

செம்புக் கம்மியர் பஞ்சலோகத்திலான உருவங்களை அமைத்து ஆலயங்களில் அழகுபடுத்தி வணங்குவதற்கு உதவுகின்றனர்.

மரக் கம்மியர் ஆலயங்கள் மட்டுமின்றி இல்லங்களையும் வடிவுற அமைத்து மக்கள் நிம்மதியாக வாழ வழிவகுக்கின்றனர்.

கரும் பொன் கம்மியர் இரும்பு உலோகத்தினைக் காய்ச்சி உபயோகப்படுத்தக் கூடியவிதமாக மக்கள் தேவைகளை நிறைவு செய்கின்றனர். அத்துடன் அமையாது, பஞ்சலோகங்களையும் எமது உபயோகத்திற்கு அமைத்துத்தரும் பணியில் ஈடுபடுவோர் மக்கள் வாழ்க்கைக்கு என்றும் உதவி செய்பவர்களே

விஸ்வகர்மாவினுடைய வழித்தோன்றல்களாக விளங்கும் பஞ்சகம்மாளரும் தம்மை "விஸ்வஸ்ரீ" என்று அழைக்க அருகதை உடையவர்களாவர்

சைவாசாரம், அனுட்டானம், ஜெபம் முதலானவற்றைக் கிரமமாக நியமம் தவறுது செய்துவரவேண்டிய கடப்பாடும், முப்புரி நூல் தரித்து இடையுருத இறைவணக்கமும் உடையவர்களாகத் தமது கடப்பாடுகளைச் செவ்வனே செய்து இகபர சௌபாக்கியங்களைத் தாமும் பெற்று மற்றையோரையும் பெறச் செய்யும் உத்தம நெறியில் ஈடுபடுவோர்களே பஞ்சகம்மாளர் ஆவர். அவர்களது ஆக்கபூர்வமான கற்பனையிலிருந்து உதித்த விக்கிரக ஆராதனைக்கு அவர்களே வித்திட்டு ஆஸ்திகத்தையும் வளர்த்தவர்களாவர்.

விஸ்வகர்மகுலத்தில் உதித்தவர்களது கைவண்ணமும் தேவாலயமும், அங்கு வழிபாட்டுக்குரியனவாகத் திகழும் சில விக்கிரகங்களும், ஐம்பொன் விக்கிரகங்களும் அவற்றுக்கு அணிவிக்கப்படும் ஆபரணுதி அலங்கார வகைகளும் எனின், விஸ்வகர்ம குலத்தின் பெருமை வார்த்தைகளால் அளவிடற்கரியதென்பது புலனுகிறது.

"வாழ்க விஸ்வகர்ம குலம்
வளர்க அவர்தம் கலைப்பணி";

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமதம்

தியாகராஜா ஆச்சாரி இரவிசங்கர்

உலகில் உள்ள சமயங்களில் எல்லாம் மிகப்பழமையானது இந்துமதமே. கிறிஸ்துவ மதம் தோன்றி இப்போது 1967 ஆண்டுகள் ஆகின்றன, இஸ்லாம் மதம் தோன்றி 1487 ஆண்டுகள் ஆகின்றன. ஆனல் இந்துமதம் தோன்றி எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆகின்றன என்பது எவருக்கும் தெரியாது. எமக்குத்தெரிய ஓர் ஐயாயிரம் ஆண்டுகளின் வரலாறு இந்து மதத்திற்கு இருக்கின்றது. இவ்வளவு பெரிய வரலாறு உலகிலே வேறு எந்த மதத்திற்கும் கிடையாது. இந்தியாவில் எத்தனையோ மதங்கள் இருக்கின்றன. அங்குள்ள மக்களிலே 100க்கு 85 பேர் இந்துக்கள். உலகு எங்கிலும் மொத்தம் 43 கோடிக்கும் மேற்பட்ட இந்துக்கள் இன்று வாழ்ந்து வருகிறுர்கள்.

கிறிஸ்துவ மதமும் இஸ்லாமிய மதமும் அயல்நாடுகளில் பிறந்து நம் நாட்டில் வந்து குடியேறியவை. ஆனல் இந்துமதம் இந்தியாவிலேயே பிறந்தது. அதுவேறு எந்த நாட்டிலிருந்தும் இந்த நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டதல்ல. இந்து மதம் என்றைக்குப் பிறந்தது என்பது எவருக்கும் தெரியாது. ஏனென்ருல் அது புத்த மதத்தையும் சமண மதத்தையும் போல, கிறிஸ்துவ மதத்தையும் முஸ்லீம் மதத்தையும் போல, ஒரு தனிப்பட்ட நபரால் தோற்றுவிக்கப்பட்டதல்ல. கற்பனைக்கும் எட்டாத காலம் தொட்டு எண்ணற்ற மகான்களின், யோகிகளின், ஞானிகளின் ஆன்மவெளியிலே ஒலித்து வந்துள்ள தெய்வீகக் குரல்களின் செய்திகளையும் அவர்கள் தங்களது ஆன்மீக ஆய்வு கூடங்களில் பெற்ற அனுபவ உண்மைகளையும் அடிப்படையாகக்கொண்டு உருவானது இந்து மதம்.

கிறிஸ்தவர்களுக்கு ஒரேயொரு பைபிள், முஸ்லீம்களுக்கு ஒரேயொரு குரான் என்பதைப்போல இந்துக்களுக்காக ஒரேயொரு நூல் என்று எதுவுமே கிடையாது. குரானையும் பைபிளையும் போல் இந்துக்களுக்கு நூற்றுக்கணக்கான நூல்கள் இருக்கின்றன. அவை அனைத்துக்கும் அடிப்படையாக விளங்குபவை நான்கு வேதங்கள். உலகிலேயே முதல்முதலில் தோன்றிய நூல்கள் இந்து வேதங்களே. ஒவ்வொரு வேதத்திலும் மந்திரங்கள், பிராமணங்கள், ஆரநியங்கள், உபநிடதங்கள் என நான்கு உட்பிரிவுகள் இருக்கின்றன. சைவம், வைஷ்ணவம், சாக்தம், கௌமாரம், சௌரம், காணுபத்யம் போன்ற பல உட்பிரிவுகள் இந்துமதத்தில் இருக்கின்றன. சைவர்களின் முழுமுதற் கடவுள் சிவன். வைஷ்ணவர்களின் முழுமுதற் கடவுள் திருமால். சாக்தர்களின் முழுமுதற் கடவுள் சக்தி. கௌமாரர்களின் முழுமுதற் கடவுள் முருகன். சௌரர்களின் முழுமுதற் கடவுள் சூரியன் காணபத்தியர்களின் முழுமுதற் கடவுள் கணபதி. இந்து மதத்தில் இத்தனை கடவுள்களா? என்று விவரம் தெரியாதவர்கள் குழப்பம் அடைகிறுர்கள். அப்படி 'குழப்பம் அடையத் தேவை இல்லை. இந்து மதத்தில் ஒரே கடவுள்தான் உண்டு. ஆனல் அந்த ஒரே கடவுள் வெவ்வேறு வகைப்பட்ட மக்களுக்கு வெவ்வேறு வடிவங்களிலே வெவ்வேறு பெயர்களிலே காட்சி அளிக்கிறுர். ஏன்? அவர் எல்லோருக்குமே ஒரே மாதிரியாகக் காட்சி அளிக்கக் கூடாதா?

மக்கள் எல்லோரும் ஒரே மாதிரியானவர்களாய் இருந்தால் அவரும் ஒரே மாதிரியாகக் காட்சியளித்திருப்பார். அறிவிலும் பண்பிலும் பான்மையிலும் நாம் பல்வேறு வகைப்பட்டவர்களாக இருக்கிறேமோ, அதனல்தான் இறைவனும் பல்வேறு வடிவங்களிலே நமக்கு காட்சி தந்து நிற்கிறுர். எடுத்துக்காட்டாக ஒரு கவிஞனும் ஒரு வணிகனும் ஒரே தெய்வக்கொள்கை உடையவர்களாக இருக்க முடியாது. கவிஞன் வணங்கும் தெய்வம் கலைகளின் தலைவியாகிய கலைமகள். வணிகன் வணங்கும் தெய்வம் செல்வத்தின் தலைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகிய திருமகள். வீரர்கள் வணங்கும் தெய்வம் வீரத்தின் தலைவியாகிய மலைமகள். ஞானிகள் வணங்கும் தெய்வம் ஞானத்தின் தலைவராகிய தட்சிணாமூர்த்தி. துறவிகள் வணங்கும் தெய்வம், துறவுகோலம் பூண்டிருக்கும் தண்டாயுதபாணி. இப்படியே யார் யார் என்ன என்ன கடவுட்கொள்கை உடையவர்களோ, அந்த அந்த கொள்கைக்குரிய வடிவத்தில் இறைவனும் அவர்களுக்கு காட்சி அளிக்கிறார்.

அப்படியானால் இறைவனின் உண்மையான வடிவம்தான் என்ன? தண்ணீரின் உண்மையான வடிவம் எது? காற்றின் உண்மையான வடிவம் என்ன? தண்ணீருக்கும் காற்றுக்கும் என்றும் இயல்பிலேயே ஒரு வடிவம் கிடையாது. இதேபோன்று இறைவனுக்கு என்று இயல்பிலேயே ஒரு வடிவம் கிடையாது. ஆனால் அவன் பல்லாயிரக்கணக்கான வடிவங்களில் தோற்றம் அளிக்கிறான். இதுதான் இந்துமதத்தின் அடிப்படை சொள்கை இதை அறியாதவர்கள் தான் இந்துக்களுக்கு ஒரு முழுமுதற் கடவுள் கிடையாது. அவர்கள் பலப்பல தெய்வங்களை வணங்குகிறவர்கள் என்று ஏளனமாகப் பேசுவார்கள். அடிப்படைத் தத்துவத்தை அறியாத காரணத்தாலே உருவம் இல்லாத ஒரே கடவுள் ஆயிரம் உருவங்களில் வணங்கப்படுவதுதான் இந்துமதத்தின் தனிச்சிறப்பு. இந்தச் சிறப்பின் காரணமாகத்தான் அது பல்லூழி காலமாக நிலைபெற்று இருக்கிறது.

எந்த எந்தக் காலத்தில் இருந்து மதத்துக்குக் கடுமையான எதிர்ப்பு இருக்கிறதோ அந்த அந்தச் சமயத்தில் எல்லாம் அப்பரைப் போலவும் ஆதிசங்கரரைப் போலவும் யாரேனும் மகான்கள் தோன்றி, அதன் அருமை பெருமைகளை நிலைநாட்டி வந்திருக்கிறார்கள். எதிர்ப்புகளால் இந்துமதம் வளர்ச்சியும் புத்துயிரும் பெற்று வந்திருக்கிறதேயன்றி, வலுக்குன்றிப் போனதே இல்லை. இது வரலாறு கூறுகிற உண்மை, அப்படியானால் இந்த இந்து மதம் எவ்வளவு சத்துள்ளதாய் இருக்கவேண்டும்? அந்தச் சத்து என்ன என்பதை எவராவது சற்று எண்ணிப் பார்த்திருக்கிறோமா? எம்மதமும் சம்மதம் என்பது இந்துக்களின் கோட்பாடு.

இதுவே இந்து மதத்திற்கு ஒரு சாகாவரத்தைத் தந்து இருக்கிறது. கிறிஸ்தவர்களும் முஸ்லீம்களும் தத்தம் சமயங்களில் எவ்வளவு பற்று உடையவர்களோ அதற்குக் குறையாத அளவு இந்து மதத்தில் பற்று உடையவர்களே இந்துக்கள். ஆதிசங்கரரும் புரந்தரதாசரும் புத்தர் பெருமானுக்கு வணக்கம் செலுத்தியிருக்கிறார்கள். புத்தர் திருமாலின் ஓர் அவதாரம் என்று கூறுகிறது பாகவதப் புராணம்.

விவேகானந்தரின் குருவாகிய இராமகிருஷ்ணர் காளிகோயில் பூசாரியாக இருந்து கொண்டே கிறிஸ்துவ மதத்தையும் முஸ்லீம் மதத்தையும் கடைபிடித்துப் பார்த்தவர். இன்றைக்கும் இராமகிருஷ்ணர் மடங்களில் இயேசு நாதரின் பிறந்தநாள் கொண்டாடப் படுகிறது. இந்துக்கள் பிற மதங்களை வெறுப்பவர்கள் அல்லர் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும். பிறமதங்களைச் சேர்ந்த ஞானிகளையும் இறைவன் வடிவமாகவே கருதி வழிபடுபவர்கள் இந்துக்கள். சாயிபாபாவும் குணங்குடி மஸ்தானும் இதற்குத் தலை சிறந்த சான்றுகள்.

இந்து மதத்தைச் சேர்ந்த மடாலயங்கள் எத்தனையோ இருக்கின்றன. ஆனால் பிறமதக்காரர்களை இந்து மதத்தின் பக்கம் இழுப்பதற்கு அவைகள் எவ்வித முயற்சியும் செய்வது இல்லை. இன்னும் சொல்லப்போனால் ஒரு கிறிஸ்தவரோ முஸ்லீமோ இந்துவாக மதம் மாறுவதற்கு ஆசைப்பட்டுத் தாமாகவே முன் வந்தால்கூட இந்த மடாலயங்கள் அவர்களை ஏற்றுக்கொள்வதில்லை. காரணம் ஒருவன் எந்த மதத்தைச் சேர்ந்தவனாய் இருந்தாலும் சரி, அந்த மதத்தில் இருந்துகொண்டே அவன் இறைவனது திருவருளைப் பெறலாம் என்பது இந்துமதத்தின் கொள்கை. இதனால்தான் இந்துக்கள் இந்துமதத்தைப் பரப்புவதற்கு என்று எந்த ஒரு தீவிர முயற்சியும் எந்தகாலத்திலும் எடுக்காமல் இருந்து வருகிறார்கள். விவேகானந்தர் அயல் நாடுகளில்போய் இந்துமதத்தைப் பரப்பவில்லையா என்று கேட்கிறீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையரசர்

தஞ்சை பெரிய கோயில் கோபுரவேலை நடந்துகொண்டிருந்தது. சில்பாச்சாரியர் சிவசங்கர ஸ்தபதிகள் கோபுர சிற்பமொன்றினைச் சிருஷ்டித்துக்கொண்டிருந்தார். அவரின் பின்னால் சிஷ்யன் ஒருவன் வெற்றிலை மடித்துக்கொண்டிருந்தான். சில்ப வேலையில் தன்னை மறந்து ஈடுபட்டிருந்த ஸ்தபதியார் பின்பக்கம் திரும்பிப்பார்க்காமலே பையன் தரும் வெற்றிலையை வாங்கி வாயில் போட்டு மென்றார். மீண்டும் ஸ்தபதியார் வெற்றிலை மடிப்பை எதிர்பார்க்கும் தருணம் தஞ்சை மன்னர் ராஜராஜரும் அவரைத் தொடர்ந்து அமைச்சரும் கோபுரசாரத்தில் ஏறி வந்துகொண்டிருந்தார்கள்.

மன்னரின் வருகையைக்கண்ட ஸ்தபதியாரின் சிஷ்யன் வணக்கத்தோடு விலகி பணிவோடு நின்றான். ஸ்தபதியாரோ வேலையில் மூழ்கி தன்னையே மறந்திருந்ததால் மன்னரின் வருகையைக் கவனிக்கத் தவறிவிட்டார், வெற்றிலை மடிப்பை எதிர்பார்த்து வலது கரத்தை பின்னால் நீட்டினார். அப்போது விலகிநின்ற சிஷ்யனின் கையில் இருந்த வெற்றிலை மடிப்பை மன்னர் தன் கையில் தரும்படி சமிக்ஞை காட்டி கையில் கொடுத்தார். ஸ்தபதியாரும் வெற்றிலை மடிப்பை வாங்கிக்கொண்டார். அதே கணத்தில் அவருக்கு ஒரு சந்தேகம் தட்டியது. திரும்பிப்பார்த்தார். மன்னர் புன்னகை பூத்தபடி நின்றுகொண்டிருந்தார். நடந்தது என்ன என்பதைப் புரிந்துகொண்ட ஸ்தபதியார் பதறி அடித்து எழுந்து நின்றார். கைகூப்பி வணங்கினார்.

"மன்னித்தருள வேண்டும் மாமன்னா. அறியாமல் அபச்சாரம் பண்ணிவிட்டேன் என்னை மறந்து வேலையில் ஆழ்ந்து போனேன். தங்கள் வருகையைக் கவனிக்கத் தவறிவிட்டேன். சாவகமும் கடாரமும் ஈழமும் கொண்ட திருக்கரத்தால் இந்த ஏழைக்கு வெற்றிலை மடித்துத் தந்தீர்களே. இது தகுமா? என்னைக் கருணை கூர்ந்து மன்னித்தருள வேண்டுகிறேன்" என்று கூறியபடி நெடுஞ்சாண் கட்டையாக அரசரின் காலில் விழப் போனார்.

மன்னர் தடுத்து நிறுத்தினார். "சில்பாச்சாரியரே நீங்கள் எந்தத் தவறும் செய்யவில்லை. நான் இந்த நாட்டுக்கரசர். நீங்கள் கலையரசர். எம்மிடையே ஏற்றத்தாழ்வு ஏது?" என்றார் தஞ்சைப் பேரரசர் ராஜராஜ சோழர்.

—செ. கதிர்வேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கார்த்தி ஜுவலர்ஸ்**
46, கன்னாரத் தெரு,
கொழும்பு 13.
தொலைபேசி: 541067

**ராம் பிரதர்ஸ்**
140, மெயின் வீதி,
கொழும்பு 11.
தொலைபேசி:
20127 - 547698

**K. தங்கையா ஆச்சாரி அன் சன்ஸ்**
19, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு 13.
தொலைபேசி
35124

**சுஜாதா ஜுவலர்ஸ்**
109, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

**ஸ்ரீ முத்துமீனாட்சி ஜுவல்லரி**
152B, செட்டியார் தெரு,
கொழும்பு 11.
தொலைபேசி: 33164 / 29104

*இணை நிர்வனங்கள்*
செல்வன் ட்ராவல்ஸ் & டுவர்ஸ்
திருமதி A. அழகுராசா
(அடகு வியாபாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு சுவாமி பதில் சொல்கிருர். ''அயல்நாடுகளிலே போய் நான் செய்த உபதேசங்களின் நோக்கம், கிறிஸ்துவர்களை இன்னும் சிறந்த கிறிஸ்துவர்களாகவும், முஸ்லீம்களை இன்னும் சிறந்த முஸ்லீம்களாகவும் உயர்த்துவதேயன்றி, அவர்களை என்னுடைய மதத்திற்கு மாற்றுவதற்கு அல்ல.'' இதுதான் சுவாமி விவேகானந்தர் சொல்லியுள்ள பதில்

மனிதப் பிறவியின் பயன் இறைவனை அடைவது. அந்தக் குறிக்கோளை நிறைவேற்றி வைப்பதற்கான பொது முயற்சியில் உலகில் உள்ள மற்ற எல்லா மதங்களையும் தன்னுடைய கூட்டாளிகளாகக் கருதுகிறது. இந்துமதத்தின் இந்தச் சுகவாழ்வுக் கொள்கை தான் இந்து மதத்துக்கு ஓர் உயரிய சிறப்பைத் தருவது. இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோருமே குறிப்பிட்ட இன்ன கொள்கையைத்தான் கடைபிடிக்கவேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. எத்தனையோ கொள்கைகள் இருக்கின்றன. இறைவனும் உயிர்களும் வெவ்வேறு பொருள்களாய் இருந்தபோதிலும் அவை இரண்டறக் கலந்து ஒரே பொருள் ஆகிவிட இயலும் என்பது இன்னொரு கொள்கை. அவை எவ்வளவுதான் இரண்டறக் கலந்தாலும் என்றைக்கும் இறைவன் இறைவன்தான், உயிர்கள் உயிர்கள் தான். இரண்டும் ஒன்ருகிவிடமுடியாது என்பது வேருெரு கொள்கை.

இதேபோல இறைவனை ஞானத்தினல் மட்டுமே அடைய முடியும் என்பது ஒரு கொள்கை, பக்தியினல் மட்டுமே அடைய முடியும் என்பது இன்னொரு கொள்கை. தொண்டு செய்துதான் அவனைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது வேருெரு கொள்கை.

இவற்றுள் எந்த ஒரு கொள்கையை வேண்டுமாலுைம் நாம் விருப்பம்போல் தேர்ந்து எடுத்துக்கொள்வதற்கு இந்து மதத்தில் நமக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டு இருக்கிறது. இவ்வளவு கருத்துச் சுதந்திரமும் பேச்சு சுதந்திரமும் வேறு எந்த மதத்திலும் அளிக்கப்பட்டிருக்கவில்லை,

நாம் எல்லோரும் இந்துக்களாகப் பிறந்து இருந்தும் நமது மதத்தினுடைய சிறப்புக்களை நாம் எண்ணிப்பார்ப்பது இல்லை. நமது மதத்தின் சாரம் என்ன என்பதை நாம் தெரிந்து கொள்வதில்லை, அந்தச் சாரமுள்ள ஒழுக்க நெறிகளை நாம் கடைபிடிப்பது இல்லை,

போனது போகட்டும் இனிமேலாவது நம்முடைய மதம் எப்படிப்பட்டது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா? தெரிந்து கொண்டால்தான் நான் ஓர் இந்து என்னும் உணர்விலே நாம் பெருமை கொள்ளமுடியும்,

வாழ்க இந்துமதம் !

வாழ்க இந்துக்கள் !!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழமுத்து முத்துக்கருப்பன் செட்டியார் நகைமாளிகை

36, செட்டியார் தெரு, தொலைபேசி
கொழும்பு 11. 28478 - 25820



## நித்தியகல்யாணி ஜுவலர்ஸ்

40, செட்டியார் தெரு, தொலைபேசி
கொழும்பு 11. 21617 / 22014


# அஞ்சலி செலுத்துகிறோம்

எம்மிடையே வாழ்ந்து இறைவன் திருவடியை அடைந்த நமதுசமூக பெரியோர்களான

திருமதி அகிலாண்டம் அம்மாள் சுப்பிரமணியம் ஆச்சாரி
திரு. எம். ராமசாமி ஆச்சாரி, மதுரை—தமிழ்நாடு
திரு. எஸ். ராமையா ஆச்சாரி, கொழும்பு-13.
திரு. துரையப்பா கிருஷ்ணசாமி பத்தர், யாழ்ப்பாணம்.
திரு. எஸ். சிவசுப்பிரமணியம், கண்டி.

ஆகியவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து, அஞ்சலி செலுத்தி அன்னவர்களின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

இதேவேளை சமீபத்தில் நாட்டின் கிழக்கு, வடக்கு மாகாணங்களில் நடந்த அனர்த்தங்களில் நம் சமூகத்தவர் பலர் அகால மரணத்தைத் தழுவினார்கள். அந்த உத்தம ஆத்மாக்களுக்கும் அஞ்சலி செலுத்தி அவரவர் குடும்பத்தாருக்கும் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஸ்வகர்மாவும் தஞ்சை கோவிலும்


டி. பாலசுப்பிரமணியம்

இன்று சரித்திர பிரசித்திப் பெற்று விளங்கும் தஞ்சாவூர் பெரிய கோவிலை கட்டத் தீர்மானித்த மாமன்னன் ராஜராஜ சோழன் தன் ஆஸ்தான சிற்பிகளை கலந்து ஆலோசித்தான். அப்போது சிற்பிகள் அரசனின் விருப்பத்தை நிறைவேற்ற சம்மதம் தெரிவித்து, தங்கள் குலதெய்வமான காளிகா பரமேஸ்வரிக்கு முதலில் ஆலயம் எடுத்து கும்பாபிஷேகம் நடத்தி வழிபாடு செய்த பின்னர்தான் மற்ற ஆலய நிர்மாண வேலைகளை தொடங்க வேண்டும். அதுதான் சிற்பசாஸ்திர முறை என்று எடுத்துச்சொன்னார்கள். மன்னரும் அவர்களின் கோரிக்கையை ஏற்று பொன்னும் பொருளும் கொடுத்து அந்த ஆலயத்தை விஸ்வகர்ம குலத்திற்கே சாசனம் செய்துவைத்து மானியங்களும் வழங்கினார்.

இப்படிக் கட்டப்பட்ட கோவில்தான் தஞ்சை அருள்மிகு காளிகா பரமேஸ்வரி திருத்தலம். இன்றும் இது விஸ்வகர்ம சமூகத்தினருக்கே சொந்தமாயுள்ளது. பலமுறையில் வழிபாடுகளும் பூஜைகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

அடுத்து பெரியகோவில் ராஜகோபுர வேலைகள் நடந்துகொண்டிருக்கும்போது கோபுரத்தின் விமானத்தை ஒரே கல்லில் செய்யவேண்டும் என்று தீர்மானித்தான் மன்னன். ஆனால் எங்கு தேடியும் ஒரே அளவில் அவ்வளவு பெரிய கல் கிடைக்கவில்லை. மாமன்னனும் ஆழ்ந்த கவலையுற்றான். ஒருநாள் சிவபெருமான் அவர் கனவில் தோன்றி, ''மன்னனே, எனது பக்தன் பொன்மணித் தட்டானைப் போய் பார். உன் கவலை தீரும்'' என்று கூறி மறைந்தார். அதன்படி பொன்மணி தட்டாரைத் தேடிக் கண்டு பிடித்து தனது கவலையைத் தெரிவித்தான். அவரும் மன்னரை வரவேற்று, தன் வீட்டு முன்புறத்தே புதைந்து கிடந்தக் கல்லைக் காண்பித்தார். அரண்மனை ஆட்களைவிட்டு தோண்டிப்பார்த்தபோது, கோபுரத்தின் விமானத்தைச் செய்யத் திட்டமிட்டிருந்தபடி, அதே அளவு கல் அவர்களுக்கு கிடைத்தது. மன்னனும் பொன்மணித் தட்டாரைக் கௌரவித்து சன்மானங்களை வழங்கினான். அத்துடன் அப்பெரியவரின் வேண்டுகோளின்படி, அவரது சமாதியை பெரிய கோபுரத்தின் நேரடி தரிசனம் கிடைக்குமாறு கட்டுவித்தான். அச்சாமி தான் இன்றும் தஞ்சை பெரியகோவிலுக்கு அடுத்துள்ள சிவகங்கை பூங்காவின் பின்புறம் இருக்கிறது. இந்தச் சமாதியிலிருந்துப் பார்த்தால் பெரியகோயில் ராஜகோபுரத்தின் முழுத்தரிசனம் கிடைக்கும்.

ஆதாரம்;- ''படைப்புக்கடவுளின் பரம்பரையில் வந்தவர்கள்'' புத்தகத்திலிருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " பெருமைப் படுகிறோம் "

இலங்கை விஸ்வகர்ம சங்கத்திற்கு சொந்தமான கட்டிடம் 40 நீண்ட ஆண்டுகளுக்குப் பின்னர், சங்கத்தின் பாவனைக்காக மீண்டும் கிடைத்துள்ளது. இக்கட்டிடத்தில் குடியிருந்த நான்கு குடியிருப்பாளர்களில் ஒருவரான திரு. **எஸ். தங்கம் ஆச்சாரி** அவர்கள், சங்கத்திலிருந்து பணம் எதுவும் பெருமல், சொன்னச்சொல் தவருமல், அவர் பகுதியைக் காலி செய்து தந்தார்.

சங்கத்தின் சார்பாகவும் சமூகத்தின் சார்பாகவும், அவருக்கு நம் மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவிக்கின்ருேம். சங்க நிர்வாக சபையில் அவர் பதவி வகிப்பது குறித்து நாம் பெருமை அடைகிறோம்.

---


**பட்டக்கண்ணு சுப்பையா ஆச்சாரி அன் சன்ஸ்**

102, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு 13.

தொலைபேசி:
22304 / 23818

---

**மாலா ஜுவலரி ஹவுஸ்**

100, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

தொலைபேசி :
25287

---

**சுபானி ஜுவல்ஸ்**

96, செட்டியார் தெரு,
கொழும்பு 11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர் அறிக்கை

இலங்கை விஸ்வகர்ம சங்க 68-வது ஆண்டு செயற்குழுவினர் தீவிரமாக சங்க வளர்ச்சியில் ஈடுபட்டு வருவதை சமூகத்தவர் அனைவரும் அறிவார்கள்.

14-9-87-ல் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சங்கத்தின் சார்பாக விழா நடைபெற்றாலும், செயற்குழு உறுப்பினர் சிலர் இந்தச் செலவை ஏற்றுக்கொண்டனர்.

30-9-87-ல் கலைமகள் விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சிறப்பு சொற்பொழிவு, இசைக்கச்சேரி, நடனம், நாடகம் போன்ற கலைநிகழ்ச்சிகளுடன் விழா சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டது. செயற்குழு உறுப்பினர்களிடமும் மற்றும் சில அங்கத்தவர்களிடமும் பணம் வசூலிக்கப்பட்டு விழா கொண்டாடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அக்டோபர் 17-ம், 18-ம் திகதிகளில் பொருட்காட்சியுடன் கூடிய மலிவு விற்பனைக் கூடங்கள் மோடி மண்டப வளவில் சிறப்பாக நடத்தப்பட்டது. சுற்று நிருபம் மூலம் முன்னறிவித்தலும் முறையாக அழைப்பிதழ் அனுப்பியும்கூட இந்த நிகழ்ச்சிக்கு 25 சதவீத அங்கத்தினர்கள் கூட ஆதரவு வழங்கவில்லை. மாறாக வெளியார் பலரே இந்த திட்டத்திற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கினார்கள்.

ஏறக்குறைய 19 ஆண்டுகளுக்கு முன்னதாக எடுக்கப்பட்ட தீர்மானம், எமது ஒன்றரை வருடகால நிர்வாகத்தில் நிறைவேற்றப்பட்டது என்பது பெருமைக்குரிய விஷயம் அதுதான், ஸ்ரீ கதிரேசன் வீதி சங்கக்கட்டிடத்தில் குடியிருந்த குடியிருப்பாளர்களை காலி செய்யவைத்தது. புதிய கலாச்சார மண்டபம் கட்டுவது என்ற தீர்மானம். கடந்த 5-10-86 முதல் அங்கு குடியிருந்த குடியிருப்பாளர்களுடன் பலவாறாகப் பேச்சுவார்த்தை நடத்தி, கனிசமான தொகையைக் கொண்டும் கடந்த 31-10-87-ல் காலிசெய்யவைத்து கட்டிடத்தை முற்றாக பொறுப்பேற்றுள்ளோம். இன்னும் ஒரு குடியிருப்பாளர்மட்டும் இந்த மாதக் கடைசியில் காலி செய்து தருவார். அவருக்கு மாற்று வீடு வசதி எற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குடியிருப்பாளர்களை காலிசெய்யப் பண்ணிய விபரத்தை விளக்கவும், நிதி வசூலிப்பது சம்பந்தமான ஆலோசனைகளைப் பெறவும், 29-11-87-ல் பொதுக்கூட்டம் நடத்தி அபிப்பிராயம் பெறப்பட்டது. நிதி வசூலிக்கவென தயார் செய்துவைக்கப்பட்ட உண்டியல் பெட்டிகளும் அன்றைய கூட்டத்தின் போது விநியோகிக்கப்பட்டன. உண்டியல் பெட்டி பெற்றவர்களின் விபரம் அறிக்கை முடிவில் தரப்பட்டுள்ளது.

ரூபா 10/- பெறுமதியான "கட்டிட நிதி வசூல்" என்ற பெயரில் சீட்டுகள் அச்சடிக்கப்பட்டுள்ளன. இதுவும் கூடிய சீக்கிரம் வெளியிடப்படவுள்ளன. இதன் மூலம் ஏறக்குறைய ரூபா 5 லட்சம் வசூலாகலாம் என்ற நம்பிக்கையுண்டு. இந்தப் பாரிய செயல் திட்டத்துக்கு அங்கத்தவர்களின் ஒத்துழைப்பை நாடுகின்றோம்.

டிசம்பர் 4, 5, 6ம் திகதிகளில் கொழும்பு விவேகானந்த சபையில் "இசை விழா" சிறப்புடன் நடைபெற்றது. சங்க சார்பாக நடைபெற்றாலும் இதன் முழு செலவையும் பட்டக்கண்ணு சுப்பையா ஆச்சாரி அன் சன்ஸ் ஸ்தாபனத்தார் ஏற்றுக்கொண்டார்கள். இசைவிழா சிறப்பு மலர் விளம்பரங்கள் மூலமும் சிறப்பு மலர் விற்பனை மூலமும் கிடைத்த தொகை கட்டிட நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிட நிதியைப் பெருக்கும் திட்டங்களில் ஒரு அம்சமாக டிசம்பர் 19ம் திகதி நாட்டிய கலா மந்திர் மாணவிகளின் ''அஷ்டலக்ஷ்மி'' நாட்டிய நாடகம் புதிய கதிரேசன் மண்டபத்தில் நடத்தப்பட்டு கனிசமான தொகையும் வருமானமாக பெறப்பட்டுள்ளது.

கட்டிடம் 3 மாடிகளாக கட்டி முடிக்க பெருந்தொகை பணம் தேவைப்படுகிறது. அதற்கான இன்னும் பல நிகழ்ச்சிகளை நடத்த தீர்மானித்து வருகிறோம். ''சிறுதுளி பெரு வெள்ளம்'' என்பது போல இந்த அரிய பணிக்கு விஸ்வகுலத்தவர் ஒவ்வொருவரும் தத்தம் பங்களிப்பை வாரி வழங்குவார்கள் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம்.

வணக்கம்

த. பாலசுப்பிரமணியம்
உப செயலாளர்

## 29-11-87–ல் உண்டியல் பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| திரு. S. ராமசந்திரன் | - | 100, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| திரு. K. கணேசன் | - | 156, ,, ,, ,, |
| திரு. A. சிதம்பரம் | - | 182, ,, ,, ,, |
| திரு. S. கருணாநிதி | - | 182, ,, ,, ,, |
| திரு. M. கணேசன் | - | 476, 2வது டிவிசன் மருதானை, கொழும்பு 10. |
| திரு. N. ஜெயகுமார் | - | 209, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13. |
| M/s சுயிஸ் ஜுவெலர்ஸ் | - | 182, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| M/s சுபானி ஜுவெலர்ஸ் | - | 96, ,, ,, ,, |
| M/s ஸ்ரீ முத்துமீனாட்சி ஜுவெல்லரி | | 152, ,, ,, ,, |
| M/s சுஜாதா ஜுவெல்லரி | | 109, ,, ,, ,, |

| | |
|---|---|
| * M/s K. தங்கையா ஆச்சாரி அன் சன்ஸ் | 19, புதுச்செட்டித் தெரு, கொழும்பு 13. |
| * M/s பழமுத்துக்கருப்பன் செட்டியார் | 36, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| * M/s நித்தியகல்யாணி | 40, ,, ,, ,, |
| * M/s ராம் பிரதர்ஸ் | 140, மெயின் வீதி, கொழும்பு 11. |
| * M/s ரோயல் டெக்ஸ்டைல்ஸ் | 237, ,, ,, ,, |
| * M/s பட்டக்கண்ணு சுப்பையா ஆச்சாரி & சன்ஸ் | 102, புதுச்செட்டித் தெரு, கொழும்பு 13. |

* குறியிட்ட ஸ்தாபனங்களுக்கு உண்டியல் பிறிதொரு தினத்தில் பொருளாளரால் அனுப்பப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விஸ்வஜோதி"

## குறுக்கெழுத்துப்போட்டி - இலக்கம் 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | | 9 | | | 12 |
| 13 | 14 | 15 | 16 | | 18 |
| 19 | 20 | 21 | | 23 | 24 |
| | 26 | | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | | 36 |

### இடமிருந்து வலம்:

1 — திருமணத்தில் மணமகனால் மணமகளுக்கு முக்கியமாக சூட்டப்படும் அணிகலன் ஒன்று

13 — இந்தக் கொடுமையால் இந்தியாவில் பல பெண்கள் உயிருடன் கொளுத்தப்பட்டுள்ளார்கள்.

19 மண்ணால் செய்யப்பட்ட வாத்திய கருவிகளில் ஒன்று. வீட்டு சமையல் வேலைக்கும் உதவும்.

23 — முனிவர்கள் துறவறம் பூண்டவுடன் அணியும் உடை இது.

28 — குற்றவாளிகள் நிரபராதி என தீர்ப்பளிக்கப்பட்டால்———— செய்யப்படுவார்கள். (முதல் மூன்று எழுத்துக்கள் மட்டும்.)

31 ... சரித்திரக் கதையொன்றில் சகுந்தலை இவ்வணிகலனை தொலைத்ததால் பல துன்பங்களை அனுபவித்தாள்.

### மேலிருந்து கீழ்

1 — ஏகதலைவன் துரோணரை————குருவாக பூஜித்து வந்தான்.

3 — இங்கு முத்தமிட்டால் தப்பில்லை.

6 — அரசியல்வாதிகள் இம்மோகம் தலைக்கேறினால் குடும்பத்தையே நினைத்துப் பார்க்கமாட்டார்கள்.
(இச்சொல் தலைகீழாக அமைந்துள்ளது.)

14 — குற்றம் செய்தவர்களுக்கு இது வழங்கப்படவேண்டும். (இங்கு சொற்கள் மாறியுள்ளன.)

23 — வீடுவரை உறவு,———வரை பிள்ளை

28 — கண் - இதன் ஒத்தக் கருத்துள்ள சொல்.

உங்கள் விடைகளை 29 - 2 - 88க்கு முன் கிடைக்கக் கூடியதாக கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். சரியான விடை அனுப்பும் அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு பெறுமதியான பரிசில் காத்திருக்கின்றது. பரிசு பெற்றோர் பெயர், விபரம் அடுத்த இதழில் அறிவிக்கப்படும்.

குருக்கெழுத்துப் போட்டி இப்பத்திரிகையின் கன்னி முயற்சி. ஆதலால் இது சம்பந்தமான உங்கள் கருத்துக்களை வரவேற்கின்றோம்.

"ஆசிரியர்" "விஸ்வஜோதி"
102, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு-13.

---

# சுவாமி ஞானனந்தகிரியின் பொன்மொழிகள்

1. உன்னைப் பிறர் நேசிக்க வேண்டுமா? நீ பிறரை நேசி
2. உன்னிடத்தில் பிறர் எப்படி நடந்துகொள்ள விரும்புகிறாயோ. அப்படியே நீ பிறரிடத்தில் நடந்துகொள்.
3. நீ மறத்தைவிடு, அறத்தை நாடு. பயன் அடைவாய்.
4. உணர்ந்து ஒழுகினால் உயர்வடைவாய்.
5. உன் மனதிற்கு நீ அடிமையானால், உலகத்திற்கு நீ அடிமையாவாய்.
6. உன் மனம் உனக்கு அடங்கினால் உலகம் உனக்கு அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் என்பவன் யார்?

## செல்வி ஆனந்தி கணபதி

இக்கேள்வியை நான் உங்களிடம் கேட்டால் நீங்கள் என்ன பதில் கூறுவீர்களோ எனக்குத்தெரியாது. என்னைக்கேட்டால் நான் கூறும் பதில் இதுதான்:- மனசாட்சிக்கு விரோதமாக நடக்காதவன் மனிதன். மற்றோரது உணர்ச்சிகளுக்கு மதிப்புக்கொடுத்து நடப்பவன் மனிதன். இல்லையேல் நமக்கும் மிருகங்களுக்கும் வித்தியாசமில்லாமல் போய் விடுமல்லவா? நாம் வாழ்வதோ ஒருமுறை அதில் எப்படி வாழ்ந்தோம், வாழ்கிறோம், வாழுவோம் என சிந்திப்பது சிறப்பு முறை. ஒருவன் தன் வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக்கொள்ளும் பொறுப்பு அவன் கையில் தான் உள்ளது. ''எல்லாம் அவன் செயல்'' என இறைவன் தலையிலே பாரத்தைப் போடுவது அறிவின்மை. நம் மதியைக் கொண்டு விதியை வெல்ல வேண்டும்.

ஒரு மனிதன் தான் பிறந்தது முதல் இறக்கும்வரை ஏதாவது ஒரு வகையிலே தவறு செய்துகொண்டுதான் இருக்கிறான். தவறு செய்யாத மனிதனே இல்லை. அப்படி இருந்தால் அவன் மனிதனல்ல, இறைவன், எந்த ஒரு மனிதனிடத்திலும் நல்லகுணம். கெட்டகுணம் சேர்ந்தே காணப்படும். ஏன், மகாத்மா காந்தி கூட தவறு செய்தவர்தான் தவறு செய்பவன் குற்றவாளியல்ல. அதை உணருபவன் தான் உத்தமன். அதைவிட அதனை மன்னிப்பவன் பெருந்தன்மையானவன். தவறுகள் ஏன் செய்யப்பட்டன, எந்தச் சந்தர்ப்பத்திலே செய்யப்பட்டன என ஆராய முற்படுகின்றவன். முற்போக்கான சிந்தனை படைத்தவன். அவனது மனசாட்சிக்கு முக்கியத்துவம் அளித்து அவனை திருத்துபவன் நல்லவன். அதை விட்டுவிட்டு அவன் மனதிற்கு மதிப்பளிக்காது, அவன் மனதை புண்படுத்த அவனைப் பற்றி மற்றோர் முன்னிலையிலே அவதூறாக கதைப்பவனா மனிதன்? அவன் மிருகத்தைவிட கேவலமானவன்.

மேலும், ''இதுதான் உலகம்'' என்று வேறு கூறிக்கொள்கிறோம். உலகம் என்பது யார்? நாம் தாம் உலகம். இறைவன் என்பவன் யார்? மனம் தான் இறைவன். நம் மனம் தான் இறைவன் இருக்கும் கோயில். இதை ஒவ்வொரு மனிதனும் உணரவேண்டும். அதன் படி செயல்பட வேண்டும். மனிதனாகப் பிறந்தால் மட்டும் போதாது. மனிதனாக வாழப் பழக வேண்டும்.

---

சமுதாயம் சமுதாயம் என சமத்துவம்
பேசும் மக்களே ;
யாரோ சமுதாயம் என நினைத்து
நமை மறந்து
சர்ச்சை செய்வது தான் முறையோ
இது தகுமோ!
சிந்தியுங்கள், செயல்படுங்கள் சீரான
வாழ்வே நம் கையில் என
நீங்கள் சீக்கிரமே உணர்ந்திடுங்கள்!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விஸ்வகர்ம சங்கம்

## 1987—88 க்கான சாதாரண அங்கத்தவர் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 0- 1 | திரு. | I. மகேந்திரன் | |
| 0- 2 | ,, | I. ஜீவானந்தன் | |
| 0- 3 | ,, | I. ராஜேந்திரன் | |
| 0- 4 | ,, | M. குணசீலன் | |
| 0- 5 | ,, | S. அமரசூரியன் | |
| 0- 6 | ,, | S. பத்மநாதன் | |
| 0- 7 | ,, | K. சண்முகநாதன் | |
| 0- 8 | ,, | S. கணபதி | |
| 0- 9 | ,, | S. தியாகராஜா | |
| 0-10 | ,, | P. முத்துக்குமார் | |
| 0-11 | ,, | M. சிவராஜா | |
| 0-12 | ,, | M. சண்முகநாதன் | |
| 0-13 | ,, | M. பாக்கியநாதன் | |
| 0-14 | ,, | M. தியாகராஜா | |
| 0-15 | ,, | D. சண்முகராஜ் | |
| 0-16 | ,, | S. ராசையா | |
| 0-17 | ,, | S. செல்லப்பா | |
| 0-18 | ,, | S. கதிர்வேல் | |
| 0-19 | ,, | S. கதிரேசன் | |
| 0-20 | ,, | S. ஆறுமுகம் | |
| 0-21 | ,, | S. சேகர் | |
| 0-22 | ,, | S. கதிர்வேல் | |
| 0-23 | ,, | R. M. சுந்தரம் | |
| 0-24 | ,, | R. நடராஜா | |
| 0-25 | ,, | I. கேசவன் ஆச்சாரி | |
| 0-26 | ,, | M. K. ராஜரட்னம் | |
| 0-27 | ,, | T. சிவநாதன் | |
| 0-28 | ,, | K. கணேசன் | |
| 0-29 | ,, | N. குணசேகரன் | |
| 0-30 | ,, | S. சுப்பையா | |
| 0-31 | ,, | R. சோமசுந்தரம் | |
| 0-32 | ,, | R. வரதராஜன் | |
| 0-33 | ,, | N. சரவணமுத்து | |
| 0-34 | ,, | M. கணேசன் | |
| 0-35 | ,, | S. ஜெகதீஸ்வரன் | |
| 0-36 | ,, | S. சீதாராம் | |
| 0-37 | ,, | S. ராமகிருஷ்ணன் | |
| 0-38 | ,, | K. சேகர் | |
| 0-39 | ,, | K. சிவராமகிருஷ்ணன் | |
| 0-40 | ,, | S. மனோகரன் | |
| 0-41 | ,, | S. விஜயகுமார் | |
| 0-42 | திரு. | S. பிரேமானந்த் | |
| 0-43 | ,, | S. கிருஷ்ணகுமார் | |
| 0-44 | ,, | D. S. ராஜா | |
| 0-45 | ,, | P. பிரபாகரன் | |
| 0-46 | ,, | N. மகேஸ்வரன் | |
| 0-47 | ,, | N. துரைராஜா | |
| 0-48 | ,, | N. தியாகராஜர | |
| 0-49 | ,, | S. ராமசந்திரன் | |
| 0-50 | ,, | K. சுப்பையா | |
| 0-51 | ,, | K. பன்னீர் செல்வன் | |
| 0-52 | ,, | N. சங்கரலிங்கம் | |
| 0-53 | ,, | S. செல்வராஜ் | |
| 0-54 | ,, | R. மணி | |
| 0-55 | ,, | N, சந்திரசேகரம் | |
| 0-56 | ,, | S. சண்முகராஜா | |
| 0-57 | ,, | P. ஜெயராமன் | |
| 0-58 | ,, | P. பட்டக்கண்ணு | |
| 0-59 | ,, | N. முத்துலிங்கம் | |
| 0-60 | ,, | P. சண்முகம் | |
| 0-61 | ,, | K. கேசவமூர்த்தி | |
| 0-62 | ,, | S. ராஜலிங்கம் | |
| 0-63 | ,, | N. சந்திரமோகன் | |
| 0-64 | ,, | N. தங்கராஜன் | |
| 0-65 | ,, | S. கிருஷ்ணபிள்ளை | |
| 0-66 | ,, | T. பாலசந்திரன் | |
| 0-67 | ,, | S. பிரபாகரன் | |
| 0-68 | ,, | R. தியாகராஜன் | |
| 0-69 | ,, | A. C. வடிவேல் | |
| 0-70 | ,, | R. ராஜேந்திரன் | |
| 0-71 | ,, | R. அன்பரசன் | |
| 0-72 | ,, | K. ராமலிங்கம் | |
| 0-73 | ,, | K. விநாயகமூர்த்தி | |
| 0-74 | ,, | S. வாசுதேவன் | |
| 0-75 | ,, | L. சந்திரசேகரம் | |
| 0-76 | ,, | S. சோமசுந்தரம் | |
| 0-77 | ,, | K. ராஜலிங்கம் | |
| 0-78 | ,, | M. சண்முகநாதன் | |
| 0-79 | ,, | K. சண்முகராஜா | |
| 0-80 | ,, | S. P. சண்முகம் | |
| 0-81 | ,, | K. ஜெயசீலன் | |
| 0-82 | ,, | N. அரியரத்தினம் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 0,83 | திரு. | M. ராஜசேகர் | 131 | திரு | P. கந்தசாமி |
| 0-84 | ,, | R. லோகேஸ்வரன் | 132 | ,, | V. குணசேகரம் |
| 0-85 | ,, | T. தேவகுமார் | 133 | ,, | A. விஜயலிங்கம் |
| 0-86 | ,, | M. மகாலிங்கம் ஆச்சாரி | 134 | ,, | K. சிவராஜா |
| 0-87 | ,, | M. கோவிந்தசாமி | 135 | ,, | M. சற்குரு |
| 0-88 | ,, | M. பாலசுப்ரமணியம் | 136 | ,, | V. பேரின்பராஜா |
| 0-89 | ,, | S. கதிர்வேல் | 137 | ,, | P. முருகானந்தம் |
| 0-90 | ,, | T. ஜெயகுமார் | 138 | ,, | S. ரவிந்திரன் |
| 0-91 | ,, | T. பாலச்சந்திரன் | 139 | ,, | K. சந்திரசேகரம் |
| 0-92 | ,, | M. சுப்ரமணியம் | 140 | ,, | T. சிவசண்முகம் |
| 0-93 | ,, | T. பேரின்பம் | 141 | ,, | S. சிவசுப்ரமணியம் |
| 0-94 | ,, | K. S. ராஜரட்னம் | 142 | ,, | T. சத்தியநாதன் |
| 0-95 | ,, | S. சிவானந்தன் | 143 | ,, | A. ஞானசேகரன் |
| 0-96 | ,, | T. உதயகுமார் | 144 | ,, | K. மாடசாமி |
| 0-97 | ,, | S. பாலகிருஷ்ணன் | 145 | ,, | I. சொக்கலிங்கம் |
| 0-98 | ,, | S. ஈஸ்வரமூர்த்தி | 146 | ,, | P. பரமசிவம் |
| 0-99 | ,, | M P. பாலசுப்ரமணியம் | 147 | ,, | M. தியாகராஜா |
| 100 | திருமதி | S. விஸ்வநாதன் | 148 | ,, | K. சுந்தரலிங்கம் |
| 101 | திரு. | M. சண்முகநாதன் | 149 | ,, | S. பரமசிவம் |
| 102 | ,, | T. விஸ்வநாதன் | 150 | ,, | N. மாரிமுத்து |
| 103 | ,, | S. சண்முகராஜா | 151 | திருமதி | S. மகேஸ்வரன் |
| 104 | ,, | M. வேதாரண்யம் | 152 | திரு. | S. சங்கரன் |
| 105 | ,, | A. சின்னதம்பி | 153 | திருமதி | P. தியாகராஜா |
| 106 | ,, | K. உதயகுமார் | 154 | திரு. | N. சுரேந்திரகுமார் |
| 107 | ,, | P. கிருஷ்ணபிள்ளை | 155 | ,, | S. தியாகராஜா |
| 108 | ,, | M. மோகன் ராமன் | 156 | ,, | V. கமலநாதன் |
| 109 | ,, | M. செல்வகுமார் | 157 | ,, | N. முத்துக்கருப்பன் |
| 110 | ,, | T. இரத்தினராஜா | 158 | ,, | S. சங்கரலிங்கம் |
| 111 | ,, | S. திருநாவுக்கரசு | 159 | ,, | N. ஜெயகுமார் |
| 112 | ,, | S. கந்தசாமி | 160 | திருமதி | V. சாந்திகுமார் |
| 113 | ,, | S. A. ஆனந்தன் | 161 | திரு. | N. ராஜகோபாலன் |
| 114 | ,, | N. மன்மதன் | 162 | திருமதி | S. ராஜகோபாலன் |
| 115 | ,, | M. A. அமிர்தலிங்கம் | 163 | திரு. | P. S. மணி |
| 116 | ,, | S. துரைராஜா | 164 | ,, | R. பஞ்சநாதன் |
| 117 | ,, | M. குபேரலிங்கம் | 165 | ,, | L. முருகன் |
| 118 | ,, | S. நவரத்தினம் | 166 | ,, | L, சிவசங்கரன் |
| 119 | ,, | M. தர்மலிங்கம் | 167 | ,, | S. K. சோமசுந்தரம் |
| 120 | ,, | K. நடராஜா | 168 | ,, | S. P. சந்திரசேகர் |
| 121 | ,, | A. புஸ்பராஜா | 169 | ,, | S. P. சந்திரசேகரம் |
| 122 | ,, | V. சிவராஜா | 170 | ,, | S. குழந்தைவேல் |
| 123 | ,, | P. சந்திரசேகரன் | 171 | ,, | A. K. சிவசாமி |
| 124 | ,, | K. நடராஜா | 172 | ,, | G. சண்முகம் |
| 125 | ,, | P. பரமேஸ்வரன் | 173 | ,, | M. K. ராமலிங்கம் |
| 126 | ,, | P. செல்வராஜ் | 174 | ,, | T. ராஜேந்திரன் |
| 127 | ,, | M. தங்கராஜ் | 175 | ,, | K. குருசாமி |
| 128 | ,, | S. ஜெகஜோதி | 176 | ,, | S. யோகராஜா |
| 129 | ,, | S. பிரபாகர் | 177 | ,, | V. செல்வநாயகம் |
| 130 | ,, | R. மக்குராமன் | 178 | ,, | V. சிவகுமார் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 179 | திரு. | K, நிர்மலதாசன் | | 200 | திரு. | K. பிரேம் ஆனந்த் |
| 180 | ,, | K. பாக்கியராசா | | 201 | ,, | S. ராமையா |
| 181 | ,, | K. செல்வராசா | | 202 | ,, | M. B. ராமசந்திரன் |
| 182 | ,, | G. செல்லமுத்து | | 203 | ,, | V. மாரிமுத்து |
| 183 | ,, | R. சிவசுப்ரமணியம் | | 204 | ,, | S. ஹரிரட்ணு |
| 184 | ,, | M. சதாசிவம் | | 205 | ,, | R ராஜேந்திரன் |
| 185 | ,, | S, கதிர்வேல் ஆச்சாரி | | 206 | ,, | T. கிருஷ்ணபிள்ளை |
| 186 | ,, | K. சற்குருநாதன் | | 207 | ,, | N. நவரட்னராஜா |
| 187 | திருமதி | I. சுப்பையா | | 208 | ,, | C. மாரிமுத்து |
| 188 | திரு. | S. கருணாநிதி | | 209 | ,, | M. யோகேஸ்வரன் |
| 189 | ,, | R. ராமச்சந்திரன் | | 210 | ,, | V. நாகராசா |
| 190 | ,, | I. தியாகு | | 211 | ,, | E. மகேஸ்வரன் |
| 191 | ,, | P. மோகன் | | 212 | ,, | I. நாகையா |
| 192 | ,, | S. முனீஸ்வரன் | | 213 | ,, | V விமலநாதன் |
| 193 | ,, | V. கனகராஜ் | | 214 | ,, | V. நாகலிங்கம் |
| 194 | ,, | S. அரியபுத்திரன் | | 215 | ,, | V. மாணிக்கராசா |
| 195 | ,, | P. பிரபாகரன் | | 216 | ,, | A. அன்புச் செல்வன் |
| 196 | ,, | S. சிவராமன் | | 217 | ,, | K. சற்குணராசா |
| 197 | ,, | P. சண்முகராஜா | | 218 | ,, | S. யோகநாதன் |
| 198 | ,, | V. ஜெயகுமார் | | 219 | ,, | S. முருகையா |
| 199 | ,, | S. அசோகன் | | 220 | ,, | S. முத்துசாமி |

This is a story about four People named Everybody, Somebody, Anybody and Nobody. There was an important job to be done and Everybody was sure that Somebody would do it. Anybody could have done it, but Nobody dit it. Somebody got angry about that, because it was Everybody's job. Everybody thought Anybody could do it, but Nobody realised that Everybody wouldn't do it.

In ended up that Everybody blamed Somebody. When Nobody did what Anybody could have done !

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விஸ்வகர்ம சங்கம்

## 1987 / 88 க்கான ஆயுள் அங்கத்தவர் பட்டியல்

| | | |
|---|---|---|
| L- 1 | திரு. | V. சண்முகராஜா |
| L- 2 | ,, | C. N. ராமசாமி ஆச்சாரி |
| L- 3 | ,, | M. சுப்பையா ஆச்சாரி |
| L- 4 | ,, | K. முத்தையா ஆச்சாரி |
| L- 5 | ,, | L. மாடசாமி ஆச்சாரி |
| L- 6 | ,, | L. கதிரேசன் ஆச்சாரி |
| L- 7 | ,, | S. பாண்டியன் ஆச்சாரி |
| L- 8 | ,, | S. வடிவேல் ஆச்சாரி |
| L- 9 | ,, | S. மாரிமுத்து ஆச்சாரி |
| L-10 | ,, | P. A. முத்தையா |
| L-11 | ,, | K. V. நாராயணதாஸ் |
| L-12 | திருமதி | A. தியாகராஜா ஆச்சாரி |
| L-13 | ,, | T. கதிர்வேல் ஆச்சாரி |
| L-14 | ,, | P. சண்முகராஜா |
| L-15 | ,, | S. ஜெயராம் |
| L-16 | ,, | K. தங்கையா ஆச்சாரி |
| L-17 | திரு. | M. பட்டக்கண்ணு |
| L-18 | ,, | T. ரட்னராஜா |
| L-19 | ,, | S. தியாகராஜா |
| L-20 | ,, | R. சுப்பையா ஆச்சாரி |
| L-21 | ,, | S. தங்கம் ஆச்சாரி |
| L-22 | ,, | P. பேச்சிமுத்து ஆச்சாரி |
| L-23 | ,, | S. கதிர்வேல் |
| L-24 | ,, | S. கதிர்வேல் ஆச்சாரி |
| L-25 | ,, | S. தங்கவேல் |
| L-26 | ,, | K. கதிர்வேல் |
| L-27 | ,, | S. K. நடராஜா |
| L-28 | திருமதி | P. கதிர்வேல் |
| L-29 | ,, | V. தங்கம் ஆச்சாரி |
| L-30 | ,, | T. சற்குருநாதன் |
| L-31 | திரு. | T. பாலசுப்ரமணியம் |
| L-32 | ,, | T. கிருஷ்ணநாதன் |
| L-33 | ,, | M. முனிசாமி |
| L-34 | Dr. | A. பவளதுரை |
| L-35 | Dr | P. K. நடராஜா |
| L-36 | திரு. | P. K. சிதம்பரநாதன் |
| L-37 | திரு. | P. K. பாலசுப்ரமணியம் |
| L-38 | ,, | P. K. பஞ்சலிங்கம் |
| L-39 | ,, | P. K. விஸ்வநாதன் |
| L-40 | ,, | P. K. கிருபாகரன் |
| L-41 | ,, | R. சண்முகம் |
| L-42 | திரு. | A. மாடசாமி ஆச்சாரி |
| L-43 | ,, | M. ஆறுமுகம் |
| L-44 | ,, | M. தங்கப்பன் |
| L-45 | ,, | M. பரமசிவம் |
| L-46 | ,, | N சந்திரசேகரன் |
| L-47 | ,, | M. ஏகாம்பரம் |
| L-48 | ,, | S. லெட்சுமணன் |
| L-49 | திருமதி | G. பாலசுப்ரமணியம் |
| L-50 | ,, | N. M. தியாகராஜா |
| L-51 | ,, | N. விவேகானந்தன் |
| L-52 | திருமதி | P. சண்முகநாதன் |
| L-53 | Dr. | A. C. விஸ்வலிங்கம் |
| L-54 | திரு. | S. சிவசுப்ரமணியம் |
| L-55 | ,, | R. சந்திரசேகரன் |
| L-56 | ,, | N. சாந்திகுமார் |
| L-57 | ,, | S. விஸ்வநாதன் |
| L-58 | திருமதி | P. விவேகானந்தன் |
| L-59 | திரு. | S. சிவானந்தன் |
| L.60 | ,, | S. சங்கரன் |
| L-61 | ,, | S. முத்துலிங்கம் |
| L-62 | ,, | S. ஜெயசந்திரன் |
| L-63 | ,, | S. ராமசந்திரன் |
| L-64 | திருமதி | S. ராமசந்திரன் |
| L-65 | திரு. | S. செல்வரட்னம் |
| L-66 | ,, | A. கணபதி |
| L.67 | ,, | N. விவேகானந்தன் |
| L.68 | ,, | N. லோகநாதன் |
| L-69 | ,, | S. ரவீந்திரகுமார் |
| L-70 | ,, | A. C. ராசையா |
| L-71 | ,, | J ராதாகிருஷ்ணன் |
| L-72 | ,, | S. கதிரேசன் |
| L-73 | திருமதி | C. சிவசுப்பிரமணியம் |
| L-74 | திரு. | T. நமசிவாயம் |
| L-75 | ,, | S. சித்திரவேல் |
| L-76 | திருமதி | A. அழகுராசா |
| L-77 | திரு. | V. R. ஐயாத்துரை ஆச்சாரி |
| L 78 | ,, | R. சுப்பையா |
| L-79 | ,, | P. T. பாலகிருஷ்ணன் |
| L-80 | ,, | A. C. சுகுமார் |
| L-81 | ,, | S. தங்கராஜா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் பெருமை

**சிந்து கதிர்வேல்**

பெண்மைக்கோர் எடுத்துக்காட்டாய்
விளங்குகிருளடி - அவள்
பெருமைதனை உலகுக்கு
எடுத்துரைப் போமடி பெண்ணே!

தாம் என்னும் சொல்லுக்கு - நிகர்
ஏதடி - நாம்
தரணியிலே அவள் புகழை
பாடிடுவோமடி பெண்ணே!

அன்னம் ஊட்டிய தெய்வம்
அவளாமடி - அவள்
ஆணைக்கு என்றும்
அடிபணிவோமடி பெண்ணே!

சத்தியத்தின் வழி
நடந்திடுவாளடி - மனதில்
சஞ்சலம் [சிறிதும்
இல்லையடி பெண்ணே!

சட்டங்கள் செய்யவும்
பட்டங்கள் ஆளவும்
படைத்தாளடி என்னை
பாரினிலே அவளைப்போல்

தெய்வம் உளதோ
கூறடி பெண்ணே;

★

# சமையல் பகுதி

## காரட் அல்வா

தேவையான பொருட்கள் :-

| | |
|---|---|
| புதிய காரட் கிழங்கு | 350 கிராம் |
| சீனி | 525 கிராம் |
| பால் | 200 மிலி லீட்டர் |
| நெய் | 200 கிராம் |
| திராக்ஷை | 50 கிராம் |
| முந்திரிப்பருப்பு | 50 கிராம் |
| ஏலப்பொடி | 1 டீ ஸ்பூன் |
| பச்சை கற்பூரம் | 1 குன்றிமணி எடை |

செய்கை முறை:


காரட்டை நன்கு கழுவி, தோல் சுரண்டி துருவிக்கொள்ளவும். துருவிய காரட்டை சுத்தமான பாத்திரத்தில் கொட்டி, பாலையும் விட்டு, அடுப்பில்வைத்து கிளறவும். பாலோடு காரட் வெந்து பதம் ஆனதும் சீனியைப் போட்டு கிளறிக்கொண்டே இருக்கவும். சுருண்டு வந்ததும் நெய்யில் திராக்ஷை முந்திரியைப் போட்டு வறுத்து, வாசனைப் பொருட்களையும் சேர்த்துக் கிளறி, கீழே இறக்கவும். அல்வா வோடு நெய் நன்கு சேரும் வரை கிளறி, வேறு பாத்திரத்திற்கு மாற்றவும். கலர் வேண்டியதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பத்து கட்டளைகள்"

1. சுறுசுறுப்பாயிரு ஆனால் படபடப்பாயிராதே
2. பொறுமையாயிரு ,, சோம்பலாயிராதே
3. சிக்கனமாயிரு ஆனால் கருமியாயிராதே
4. அன்பாயிரு ,, அடிமையாயிராதே
5. இரக்கமாயிரு ஆனால் ஏமாந்து போகாதே
6. கொடையாளியாயிரு ,, ஓட்டாண்டியாயிராதே
7. வீரனாயிரு ஆனால் போக்கிரியாகாதே
8. இல்லறத்தை நடத்து ,, காமவெறியனாகாதே
9. பற்றற்றிரு ஆனால் காட்டுக்குப் போகாதே
10. நல்லோரை நாடு ,, அல்லோரை வெறுக்காதே

# " சங்கு கோலம் "



— செல்வி தர்ஷினி பாலசுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனம் அங்கத்தவர்களே, வாசகர்களே,

ஏற்கனவே வெளியிடப்பட்ட "விஸ்வஜோதி" வெளியீடுகளில் வெளிவந்ததைவிட இந்த இதழில் கட்டுரைகளும், கவிதைகளும் பெருமளவில் பிரசுரமாகியுள்ளன. இதற்குக் காரணம் தங்கள் ஆதரவும், உற்சாகமும், ஒத்துழைப்புமேயாகும். தங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

மேலும் வெளிவரவேண்டியுள்ள இதழ்களுக்கும் தங்கள் கைவண்ணத்தையும், கற்பனைவளத்தையும் தந்து உதவுவீர்கள் என நம்புகிறேன். நல்ல கருத்துள்ள கதைகள், நம் சமூக, சமய தொடர்புள்ள கட்டுரைகள், கவிதைகள், சமையல் குறிப்புகள், மாதர்களுக்கு தேவையான குறிப்புகள். கோலங்கள், துணுக்குகள் எதுவானாலும் எழுதியனுப்புங்கள் தரமானவையாக, இருப்பின் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டு "விஸ்வஜோதியில்" பிரசுரிக்கப்படும்.

அதுமட்டுமல்லாது, தங்கள் அபிப்பிராயங்களை - ஆக்கப் பூர்வமானவற்றை - எழுதி அனுப்ப வேண்டுகிறோம்.

அனுப்பவேண்டிய முகவரி;

பத்திரிகை ஆசிரியர்
"விஸ்வஜோதி;;
இலங்கை விஸ்வகர்ம சங்கம்,
102, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு-13.

நன்றி!

திருமதி. மல்லிகா தியாகராஜா
- ஆசிரியை -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BOOK POST




Mr./Mrs. S. RAMACHANDRA
153 NEW CHETTY ST
COLOMBO, 13

If undelivered, please return to :-

## CEYLON VISVAKARMA SANGAM

102, NEW CHETTY STREET,
COLOMBO - 13.

ஸ்பாட்டன் பிரின்ஸ் லிமி., 154, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13. தொலைபேசி 23638

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org